செய்தி வெளியீடு எண் : 313

நாள் : 03-06-2019

# பத்திரிகைச் செய்தி

மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகத்தின் கீழ் இயங்கும் பூவிருந்தவல்லியிலுள்ள பார்வையற்றோருக்கான அரசு தொழிற்பயிற்சி மையத்தில் புத்தகம் கட்டுபவர் ( ஆண்கள் / பெண்கள்) தொழிற் பயிற்சிப் பிரிவில், இலவச விடுதி வசதியுடன் பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு 2019–2020 ஆம் நிதியாண்டிற்கான ஓராண்டு பயிற்சியளிக்கப்பட உள்ளது. பயிற்சியாளர்களுக்கு பயிற்சி உதவித்தொகை மாதந்தோறும் ரூ.300/– அளிக்கப்படும். இந்த ஆண்டுக்கான இப்பயிற்சியில் சேர்த்து கொள்வதற்கான கல்வித் தகுதி 8–ஆம் வகுப்பு தேர்ச்சி மற்றும் வயது வரம்பு 01.06.2019 அன்று 14 வயதிலிருந்து 40 வயது வரையுள்ள, பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளியாக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பார்வையற்றோருக்கான அரசு தொழிற்பயிற்சி மையம், பூவிருந்தவல்லி, சென்னை–56 (ம) அனைத்து மாவட்டங்களிளும் உள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் 14.06.2019 மாலை 5.30–க்குள் கீழ்காணும் முகவரிக்கு வந்து சேர வேண்டும்.

<u>விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி</u>

முதல்வர்–புலனாய்வாளர்,
பார்வையற்றோருக்கான அரசு
தொழிற்பயிற்சி மையம், பூவிருந்தவல்லி,
சென்னை– 600 056.

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.